DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -31

| | | |
|---|---|---|
| Name | : Dr.கந்தசாமி | Caste: |
| Father's Name: | திரு. சோமசுந்தரம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 29th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8, A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**29.01.2024**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு மருத்துவதுறையில் தலைமை மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து பணி நிறைவு பெற்றுவிட்டேன். நான் கடந்த 16.05.2008 அன்று அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் பிற்பகல் 3.20 மணிக்கு நான் மேற்படி மருத்துவமனையில் அலுவலலில் இருந்தபோது மீன்சுருட்டி காவல்நிலைய ஆய்வாளரிடமிருந்து கு.எண்.130/2008 இ.த.ச.பிரிவுகள்147, 148, 341, 326, 324, 302 307 மற்றும் 120(பி) படியான வழக்கில் சம்மந்தப்பட்ட சுரேஷ், த.பெ.சூரியமூர்த்தி என்ற சுமார் 22 வயது நிரம்பிய ஆண் பிரேதத்தின்மீது சடலக்கூராய்வு செய்து அறிக்கை வழங்கக்கோரி வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டது.

பிரேதத்தை மேற்படி காவல்நிலையத்தை சேர்ந்த த.கா.அன்பழகன் என்பவர்

என்னிடம் ஒப்படைத்து அடையாளம் காண்பித்தார். அந்த விண்ணப்பத்திற்கிணங்க அன்றையதினமே பிற்பகல் 3.30 மணிக்கு சடலக்கூராய்வை ஆரம்பித்தேன்.

பிணவிரைப்பு தன்மை பிரேத்தின் இரண்டு கால்களிலும், இரண்டு கைகளிலும் காணப்பட்டது. அந்த பிரேதம் சாதாரணமாக போசிக்கப்பட்ட ஆண் சடலம். பிரேதம் மல்லாந்த நிலையில் படுக்க வைக்கப்பட்டிருந்தது. கைகள் பக்கவாட்டில் இருந்தது. கண்கள் மூடிய நிலையில் காணப்பட்டது. வாய் பாதி திறந்த நிலையில் இருந்தது.

பிரேதத்தில் கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

1. வலது பக்க கக்கத்தில் 8x3 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது. அந்த காயமானது ரத்தகுழாய்களையும், எலும்பையும் சிதைத்து காணப்பட்டது.

2. வலது முன் கையின் பின்புறத்தில் 4x2 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது.

3. முகத்தின் இடது பக்கத்தில் 8x3 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது.

4. கழுத்தின் பின்பக்கத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது கழுத்து எலும்பின் அருகில் 8x2 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது. அந்த காயத்தின் வழியே ரத்தகுழாய்கள், நரம்புகள் மற்றும் தண்டுவடம் ஆகியவை தெரியகூடிய நிலையில் காணப்பட்டது.

5. இடது கையில் அனைத்து விரல்களுக்கும், விரல் எலும்புகளுக்கும், உள்ளங்கை எலும்பிற்கும் இடையே உள்ள பகுதியில் வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. விரல்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருந்தது. அந்த காயத்தின் வழியாக ரத்தகுழாய்கள் வெளியே தெரிந்தது.

<u>உட்புறகூராய்வு</u>

<u>மார்பு பகுதி –</u> விலா எலும்புகளில் முறிவு எதுவும் காணப்படவில்லை. நுரையீரல்கள் ரத்தம் செரிந்த நிலையில் காணப்பட்டது. இருதயம் காலியாக காணப்பட்டது.

**வயிற்று பகுதி–** இரைப்பை காலியாக காணப்பட்டது. குறிப்பாக எந்த வாடையும் இல்லை. மண்ணீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் ஆகியவை ரத்தம் செரிந்த நிலையில் காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது.

**கபாலம்–** கபாலத்தில் எலும்பு முறிவுகள் எதுவும் இல்லை. மூளை ரத்தம் செரிந்து காணப்பட்டது.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு பிண கூராய்வு நிறைவு செய்யப்பட்டது. மேற்படி நபர் பிணகூராய்வு செய்யப்படுவதற்கு 6 முதல் 12 மணி நேரங்களுக்கு முன்பாக இறந்திருக்க கூடும்.

மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி, ரத்தபோக்கு மற்றும் முக்கிய உடல் உள்ளுருப்பான தண்டுவடத்தில் ஏற்பட்ட காயம் ஆகியவற்றின் காரணமாக இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்து நான் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். என்னால் வழங்கப்பட்ட பிரேதபரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.33.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டாகத்திகள் மற்றும் வீச்சருவாள் போன்றவற்றால் ஒரு நபர் தாக்கப்படும்போது நான் மேலே சொன்ன வெளிப்புற காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரேதபரிசோதனை மேற்கொண்ட தினத்தன்றே ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது ஆயுதங்களை காட்டி விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்று நினைவில்லை. நான் மேலே சொன்ன வெளிபுற காயங்கள் என்னவகையான ஆயுதங்களால் தாக்கினால் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்று நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.